1.9.2025

அ.வ.எண். 91/2020

வா.சா.1 தமிழ்ச்செல்வி க/பெ. சீனிவாசன்

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தந்தை உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். எனது தந்தை 1983ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார். எனது தந்தை 1982ம் ஆண்டு ஓய்வு பெற்றார் என்றால் எனக்கு சரியாக தெரியாது. எனது தந்தை அவரது சகோதரர்களுடன் ஒரு பாக பிரிவினை செய்து கொண்டார் என்றால் சரிதான், அந்த பாக பிரிவினை 1983ம் ஆண்டு நடந்தது என்றால் சரிதான். அந்த பாக பிரிவினைக்கு முன்பு நாங்கள் நான்கு பேரும் பிறந்துவிட்டோம் என்றால் சரிதான். நான் கேட்டுள்ளபடி 4ல் 1பங்கு கிடைக்கதக்கதல்ல, எங்களுக்கு தலா 12ல் ஒரு பங்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. எனது தாயார் பெயர் லட்சுமி ஆகும். எனது தந்தை இறப்பதற்கு முன்பே எனது தாயார் இறந்து விட்டார். எனது தாயார் 2001ம் ஆண்டு இறந்து விட்டார் என்றும், அப்போது எனது தந்தைக்கு வயது 77 என்றால் சரிதான். எனது தந்தைக்கு வயது அதிகமானதாலும், ஆதரவு இல்லை என்பதால் வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகளுக்கு பிரிவினை செய்து கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. பாக பிரிவினைக்கு பின்னர் வழக்கு சொத்தில் போர்வெல் அமைத்தும், கடைகள் கட்டியும் வாடகைக்கு விட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் போர்வெல், கடைக்கள் மற்றும் விளம்பர பலகை இருப்பதை காட்டவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரில் வங்கியில் வைப்பீடு உள்ளதா என்றால் இருப்பதாக சொன்னார்கள் அதை வழக்கில் காட்டவில்லை. வழக்கு சொத்தின் அருகில் எனது தாயாருக்கு சொந்தமான சொத்து உள்ளதா என்றால் அது எனது கணவருக்கு சொந்தமான சொத்து ஆகும். வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் தான் எனது பெற்றோர்கள் வசித்து வந்தார்களா என்றால் அங்கு தான் வசித்தார்கள். சண்முகம் மற்றும் பெருமாள் எனது சகோதரர்கள் என்றால் சரிதான், தற்போது சண்முகம் உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் உள்ள சொத்தும் பொது குடும்ப சொத்து என்றால் சரியல்ல. அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்காதது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் முன்பே பாகபிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றும், நான் வழக்கில் சொல்லியுள்ள சொத்து விவரங்கள் தவறு என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஓம்/- சீ.தமிழ்ச்செல்வி

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.